# பன்முக நோக்கில்
# பதினொராம் திருமுறை

பதிப்பாசிரியர்கள்
கலாநிதி க. இரகுபரன்
கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
இந்துமத அலுவல்கள் அமைச்சு

நூலின் பெயர் : பன்முக நோக்கில் பதினொராம் திருமுறை

பதிப்பாசிரியர்கள் : கலாநிதி க. இரகுபரன்
கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

முதற் பதிப்பு : 2017

வெளியீடு : இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
248, 1/1, காலி வீதி, கொழும்பு 4, இலங்கை

அச்சு : குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு 6

விலை : 800/-

Title : Panmuka Nokkil Pathinoram Thirumurai

Editors : Dr. K. Raguparan
Dr. S. Prasanthan

First Edition : 2017

Published by : Dept. of Hindu Religious & Cultural Affairs
248, 1/1, Galle Road, Colombo 4, Sri Lanka

Printed by : Kumaran Press (Pvt) Ltd
39, 36th lane, Colombo 6

ISBN 978-955-9233-45-9

# பதினொராம் திருமுறைச் சிவத்தலங்கள்

சி. ரமணராஜா

அனுபவவியல் மற்றும் அருளியல் நோக்கிலான வெளிப்பாடுகளாக அமையும் பன்னிரு திருமுறைகளுக்குச் சைவ வரலாற்றில் தனித்துவமான இடமுண்டு. இவற்றை அனுபூதி இலக்கியங்கள் என்ற வகைமையிலும் எடுத்தாள்வர். இறைவனை தமது ஊனில் உயிரினில் உணர்வினில் இருந்த ஒன்றாக உணர்ந்து, அவ்விறைவன் திருவருள் உள்நின்று உணர்த்தப் பாடியனவாக இத்திருமுறை இலக்கியங்கள் சிறப்பிக்கப்படுகின்றன. எனதுரை தனதுரையாக, நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை என அமைந்த கருத்தியல் வெளிப்பாடுகள் மேற்போந்த சிந்தனையை மெய்ப்பிக் கின்றன. இருபத்தேழு அருளாளர்களால் ஆக்கியளிக்கப்பட்டுள்ள பன்னிரு திருமுறைகளும் தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்திநிற்கின்றன. சமூக நிறுவனங்களாக விளங்கிவருகின்ற திருக்கோயில்களை நடுவணாகக் கொண்டு ஊற்றெடுத்த இவ்விலக்கியங்கள் தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளை விரிவுபடுத்தின.

பதினொராந் திருமுறையில் அடங்கியுள்ள நாற்பது பிரபந்தங் களினூடாக சிவத்தலம் பற்றிய சிந்தனைகளே இவ் வாய்வில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. தலச்சூழல், அமைவிடம், இறைவன், இறைவியரின் தோற்றப் பொலிவுகள், பெருமைக் கூறுகள், திருவருட்செயல்கள், தீர்த்தச் சிறப்புகள், இயற்கை வர்ணணை முதலியன சிவத்தலம் பற்றிய பின்னணியில் எடுத்தாளப்பட்டிருப்பினும், ஆன்ம வாழ்வின் அவல நிலைகள், இறைவன் மீதான முறையீடுகள், துன்ப நீக்கத்துக்கான

வழிகோருதல்கள், வாழ்வின் நிலையற்ற தன்மைகள் முதலியன சிவத்தலங்களை அடிப்படையாகக்கொண்டு அழுத்தப்பட்டிருப்பதனை இனங்கண்டுகொள்ள முடிகின்றது. இந்த வகையில் பதினொராந் திருமுறையில் இடம்பெற்றுள்ள சிவத்தலங்கள் பற்றி ஆராய இக்கட்டுரை முயல்கிறது.

## பதினொராம் திருமுறை

தெய்வத் தன்மையும் அழகும் அருட்செல்வமும் நிறைந்த பனுவல்களாகக் காணப்படும் பன்னிரு திருமுறைகளுள் பன்னிருவரால் பாடப்பட்டதும், நாற்பது பிரபந்தங்களையுமுடையதாக அமைவது பதினொராந் திருமுறையாகும். இதனைப் பிரபந்தமாலை எனவும் சிறப்பித்துச் சுட்டுவர். திருவாலவாய் இறைவனால் அருளிச் செய்யப் பட்ட திருமுகப்பாசுரம் தொடக்கம் நம்பியாண்டார் நம்பியால் பாடப் பெற்ற திருநாவுக்கரசு தேவர் திருஏகாதசமாலை ஈறாக அப்பிரபந்தங்கள் இடம்பெற்றுள்ளன. சிவபரம்பொருளையும், அப்பொருளின் மீது ஈடிணையற்ற ஈர்ப்பைக் கொண்டுள்ள அடியார்களையும் எடுத்தாளும் சிறப்பு இத்திருமுறைக்கு உண்டு.

## சிவம் - ஸ்தலம் - சிவத்தலம்

சிவத்தலங்கள் எனப்படுபவை எல்லை கடந்த பொருளாகிய சிவம் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் இடங்களே எனலாம். அதாவது சிவனுக்குரிய வணக்கஸ்தலங்களே சிவத்தலங்கள் எனச் சுட்டலாம். திருத்தலங்களானவை தமிழர் நாகரிக வளர்ச்சிக்கு அடித்தளங்களாக அமைந்திருந்தமையினை திருக்கோயில் கல்வெட்டுக்களும், திருமுறைகள் உள்ளிட்ட இலக்கியங்களும் மெய்ப்பித்து நிற்கின்றன.

சமூக அமைப்பாகச் சமயமும் சமயத்தின் அமைப்பாக அச் சமயம் சார்ந்த நிறுவனங்களும் குறிப்பாக ஆலயங்களும் விளங்கி வருகின்றன. சமய நிறுவனங்களான திருத்தலங்கள் வழிபாட்டிடங் களாக மட்டுமன்றி சமுதாய மையங்களாகவும், அறிவியல் பூர்வமாக உயிரோட்டமளிப்பனவாகவும் விளங்கிவருகின்றன.

இறைவனிடம் குறையிரத்தல், முறையீடு செய்தல், பல்வேறு வகையிலான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுதல், உடலுள நலப் பேணுகைக் களங்களாகப் பயன்படுத்தல், இவற்றை மையமாகக் கொண்டு புனிதப் பயணங்களை அல்லது யாத்திரை களை மேற்கொள்ளுதல், வேள்வி, தவம், தீர்த்தம், தோத்திரம், தியானம், விரதம், பூசை முதலிய வணக்க முறைமைகளைக் கைக்கொள்ளுதல், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றின் சிறப்புரைப்பதன் மூலம் இலக்கிய பாரம்பரியத்தைக் கட்டமைத்துப் பேணுதல் முதலியன திருக்கோயில் வழிபாட்டினால் செழுமை யடைகின்றன. எனவேதான் சமூக நலச் சிந்தனைகள் யாவும் திருத்தலங்களை மையப்படுத்தி செயல்நிலைக்குட்பட்டிருந்தன.

துன்பக்கடலாகிய இவ்வுலக வாழ்விலிருந்து மீள்வதற்கு திருத்தலங்களை நோக்கியதாகவே திருமுறைகள் வழிப்படுத்தி யிருக்கின்றன. பாசத்தளைகளால் கட்டுண்ட ஆன்மாக்கள் அவற்றிலிருந்து நீங்கி இறைவன் திருவடியைச் சேரப் பெறு வதற்கான நெறிகளையும் அவை கட்டமைத்திருக்கின்றன. அந்நெறிகளானவை சாதனைக்கும் போதனைக்கும் உரியன வாகும். திருமுறைகளில் உண்மைச் சாதனை, உபாயச் சாதனை என இருவேறு சாதனைகள் விரித்துரைக்கப்படுகின்றன. உலக இன்பத்தையும் உயர்வையும் அவாவிச் செய்யும் வழிபாடு உபாயச் சாதனை என்றும், சிவானுபூதியை அவாவிச் செய்யும் வழிபாடு உண்மைச் சாதனை என்றும் சமய ஞானிகள் எடுத் துரைப்பர். ஆன்மீக சாதனங்களுள் திருக்கோயில்களும், திருமூர்த்திகளும், திருத்தொண்டர் சேவையும் முக்கியமானவையாக எடுத்துரைக்கப்படுகின்றன. தாயுமானவரின் கருத்தின் படி மூர்த்தி, தல, தீர்த்த உபாசிதங்கள் ஞானநெறிக்குரிய வழியென்பது ஸ்பஷ்டமாகும். சற்குருவின் உபதேசப்பேறே திருக்கோயில் வழிபாட்டின் முடிபாகுமென்பர் சான்றோர். குருவின் உதவியின்றி ஞானநிலை கைகூடாதென்பது சமய நூற்றுணிபாகும். ஆகவே, இந்நெறிகளுக்குரிய பயிற்சிக்களமாக கோயில்களைச் சுட்டி

யுணர்த்தி அவற்றை நோக்கி வழிப்படுத்தியுள்ளமை தனிச் சிறப்பாகும். இங்கு,

> சிவனுறையும் கோயில் சூழ்ந்து
> தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே

என வரும் நாவுக்கரசர் கூற்றும்,

> ....ஆலயம் தானும் அரனெனத் தொழுமே

என்ற சிவஞானபோதச் சிந்தனையும் நினைவிற் கொள்ளத்தக்கன.

**பதினொராம் திருமுறையில் சிவத்தலங்கள்**

சைவத்தின் முதற்பொருளாகிய சிவனின் பெருமைகள், திருவருட் சிறப்புகள், திருக்கோலங்கள் என்பன பல்வேறு நிலைகளில் எடுத்தாளப்பட்டு குறிப்பிடப்பட்ட தலங்களுடன் இணைத்துப் பேசியிருப்பது திருமுறை ஆசிரியர்களிடையே காணப்படுகின்ற தனித்துவவுத்தியாகும். இதனை ஆன்மீக வழிகாட்டல் என்றே கூறலாம். சிவனுக்குரியனவாகவுள்ள திருத்தலங்கள் மட்டுமன்றி கணபதி, முருகன் முதலிய கடவுளர்க்குமுரிய திருத்தலங்களும் திருமுறை ஆசிரியர்களால் விதந்து போற்றப்பட்டுள்ளன. ஏனைய திருமுறைகளில் கணபதி, முருகன் முதலிய கடவுளர் சிவனுடன் இணைத்துப் போற்றப்பட்டுள்ளனர். ஆயினும் ஒன்பதாம் திருமுறையில் திருவிடைக்கழித் திருவிசைப்பாவில் முருகன் தனித்துப் போற்றப்பட்டுள்ளார். ஆனால், இத்திருமுறையில் கணபதி, முருகன் ஆகிய இருகடவுளரும் தனித்தனியாக சிறப்பித்துப் போற்றப்படுகின்றனர். திருமுருகாற்றுப்படை, மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை, மூத்த பிள்ளையார் மும்மணிக்கோவை, திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை முதலிய நூல்கள் முற்குறிப்பிட்ட கடவுளரிருவரினதும் சிறப்புரைக்கின்றன. இவ்வகையில் நோக்குகின்றபோது பதினொராந் திருமுறையிலமைந்த நாற்பது பிரபந்தங்களில் இருபத்தைந்து சிவன் பற்றியனவாகவும், ஒன்று முருகன் பற்றிய தாகவும், மூன்று விநாயகர் பற்றியனவாகவும், ஏனைய

பதினொன்றும் அடியவர்கள் பற்றியனவாகவும் காணப்படுகின்றன. ஆகவே, பதினொராந் திருமுறையில் உள்ள பிரபந்தங்கள் பெரும்பான்மையானவை சிவத்தலங்களின் சிறப்புக்களை வேறுபட்ட வடிவங்களில் வெளிப்படுத்தியுரைக்கின்றன.

கோவை, அந்தாதி, உலா, மாலை, ஆற்றுப்படை எனும் இலக்கிய நூல் வகைமையிலமைந்த சிறுபிரபந்தங்கள் இங்கு காணப்படுகின்றன. இப்பிரபந்தங்களானவை ஒரு தலத்தின் மீதுள்ள இறைவனைக் குறித்துப் பாடப்பட்டவையாகவும், குறித்த தலங்களின் மீது பதிகம் பாடிய நாயன்மார்களின் பக்தித் திறன் குறித்துப் பாடப்பட்டனவாகவும் உள்ளன. இதனடிப்படையில் பதினொராம் திருமுறையில் இடம்பெறுகின்ற சிவத்தலங்களை,

1. இத்திருமுறை ஆசிரியர்கள் தாமே இறைவனைப் போற்றும் வகையில் பாடிய சிவத்தலங்கள்
2. இறையடியவர்களைப் போற்றும் தன்மையில் அவ்வடியவர் களால் போற்றிப் பாடப்பட்ட சிவத்தலங்கள்

என இருவகைமைக்குட்படுத்தி விபரிக்கலாம். இரண்டாம் வகைமையினைக் காட்டிலும் முதலாம் வகைமையிலே சிவத்தலங்கள் பலவும் வேறுபட்ட சிறப்புக்களுடன் எடுத் தாளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தலங்களைக் குறித்துப் பாடப்பெற்றமையால் அவ்வத்தலங்களின் பெயர்களை அப்பிரபந்தங்கள் அடையாகக் கொண்டுள்ளமை சுட்டத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவாரூர் மும்மணிக்கோவை, கோயில் நான்மணிமாலை, திருவொற்றியூர் ஒருபா ஒருப·து, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞான உலா, கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி, திரு ஈங்கோய்மலை எழுபது, திருவெழு கூற்றிருக்கை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருக்கோவிற் திருப்பண்ணியர் விருத்தம் முதலியனவற்றைக் குறிப்பிடலாம்.

பொதுவாக இத்திருமுறையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற சிவத்தலங்களாக கீழ்வருவனவற்றை இனங்காணக்கூடியதாக உள்ளது. திருவாலவாய், திருவாலங்காடு, திருத்தில்லை, திருக்கயிலை, திருவாரூர், சீர்காழி/திருக்கழுமலம், திருவிடை மருதூர், திருவேகம்பம், திருவொற்றியூர், திருக் குடந்தைக் கீழ்கோட்டம், திருவையாறு, திருத்துருத்தி (குற்றாலம்), திருக்கோடிகா, திருவிடைவாய் (திருவிடைவயல்), திருநெடுங்களம், குழித்தண்டலை (குளித்தலை), திருவானைக்கா, திருமயிலை (கபாலீச்சரம்), உஞ்சேனை மாகாளம், வளைகுளம், திருச்சாய்க்காடு, திருப்பாச்சிலாச்சிரமம், திருச்சிராமலை, திருமழபாடி, திருவாப்பாடி, திருப்பனந்தாள், திருமயானம், திருக்காளத்தி, திரு ஈங்கோய்மலை, திருவலஞ்சுழி, திருவாவூர், திருவண்ணாமலை, திருவாமாத் தூர், திருவேங்கடம், திருக்கூடல், திருவெண்காடு, திருமறைக்காடு, பூம்புகார், கானப்பேர், திருஆக்கூர், புறந்தை, காரோணம், திரு ஆடானை, திருப்பழனம், திருப்புன்கூர், திருமண்டளி, திருக்கோகர்ணம், திருக்கோப்பாடி, திருவணம், திருவோத்தூர், திருப்புகலூர், திருக்களந்தை, தாங்கால், தலையாலங்காடு, திருமாலுமங்கை, செங்குன்றூர், புலிப்பொது, திருமேற்றளி, அட்டவீரட்டம், அம்பர்மாகாளம், ஆலந்துறை, திருக்கடவூர், கடனாகைக் காரோணம், காவாத்தலை, திருக்கழிப்பாலை, திருக்காறாயில், திருக்கானப்பேர், திருக்கோளிலி, சாய்க்காடு, செங்காட்டங்குடி, திருப்பாசூர், திருப்புகலூர், திருப்பூவணம், திருப்பைஞ்ஞீலி, திருமருகல்.

தொண்டை நாடு, வடநாடு, நடுநாடு, பாண்டி நாடு, மலைநாடு, சேரநாடு, கொங்குநாடு, துளுவநாடு, சோழநாடு எங்கும் காணப்படுகின்ற சிவத்தலங்கள் இங்கு இடம்பெற்றுள்ளன. அத்துடன் பாசுபதம், காளாமுகம் முதலிய சைவச் சார்புடைய சிவத்தலங்களாகவும் இவற்றுள் சிலவற்றை இனங்காண முடிகிறது. அத்துடன் பஞ்சபூதத் தலங்கள், அட்டவீரட்டத் தலங்கள், ஷப்தவிடங்கத் தலங்கள் எனும் சிறப்பு வகைமையிலமைந்த சிவத்தலங்களும் இவற்றிலடங்கும். இவற்றுள் திரு ஆலவாய்,

திருவாலங்காடு முதலியன பதிகத் தொடரில் முதன்மை நிலையில் இடம்பெற்றிருப்பதனாலும், திருக்கோயில்களின் தொகுப்பாக ஷேத்திர வெண்பா காணப்படுவதனாலும் அவை பற்றி கீழ்வருமாறு சுருங்க விளக்குவது பொருத்தமுடையதாக அமையும்.

**திருவாலவாய்**

திரு ஆலவாய் என்னும் சிவத்தலம் இத்திருமுறையில் முதன்முதலாக் சுட்டித்துக் கூறப்பட்டுள்ளது. பாண்டிநாட்டின் தலைநகராகிய மதுரையில் சிவபெருமானுக்குரிய திருக்கோயில் இதுவாகும். திரு ஆலவாயில் அமர்ந்திருக்கின்ற சிவபெருமானால் அருளப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற திருமுகப் பாசுரம் (திருமுகப் பாயிரம்) முதற் பிரபந்தமாக இடம்பெற்றுள்ளது. இப்பாசுரத்திலுள்ள பன்னிரு வரிகளையும் சிவனின் சிறப்புரைத்தல் (1 - 4), சேரமான் பெருமான் சிறப்புரைத்தல் (5 - 9), பாணபத்திரரின் நிலை என முக்கூறாக்கி பொருள் காண்பர். சிவனின் சிறப்புரைத்தல் பகுதியிலே,

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில் பொழில் ஆலவாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்...

என திரு ஆலவாய்த் தலத்துப் பெருமை கூறப்பட்டிருக்கின்றது.

சிவன், பாணபத்திரன் என்னும் பெயருடைய இசைப்பாணரின் வறுமையைப் போக்குதற்காக சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதிய திருமுகப்பாசுரத்தில் திரு ஆலவாய்த் தலத்தின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. அதாவது ‘திங்கள் தங்கிய மதில்களால் சூழப்பட்ட மாடங்களையுடைய கூடல் நகரத்திலே நிலைபெற்ற பால்போலும் வெண்ணிறச் சிறகுகளை உடைய அன்னங்கள் பயின்று வாழும் நீர்நிலையோடு கூடிய சோலை சூழ்ந்த திருவாலவாயென்னும் திருக்கோயிலிலே நிலைபெற வீற்றிருக்கும் இறைவனாகிய யான்’ என்பது அப்பகுதியின் திரட்சியான

கருத்தாகும். இந்நிகழ்ச்சி சுந்தரரின் திருத்தொண்டத் தொகை, சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம், பெரும்பற்றப் புலியூர் நம்பியின் திருவிளையாடற் புராணம், பரஞ்சோதி முனிவரின் திரு விளையாடற் புராணம் முதலிய நூற்பகுதிகளிலும் நுவலப்பட்டுள்ளது.

இத்தலத்திலுள்ள இறைவன் - சொக்கநாதர், சோமசுந்தரர், இறைவி - மீனாட்சி, தீர்த்தம் - பொற்றாமரை, விருட்சம் - கடம்பமரம், ஸ்தல விநாயகர் - சித்திவிநாயகர் ஆகும். சிவன் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் செய்தமை, அங்கயற்கண்ணி அம்மையார் அவதாரம் செய்து பாண்டியன் திருமகளாக வளர்க்கப் பெற்று சோமசுந்தரராக வந்த சிவபெருமானைத் திருமணம் செய்துகொண்டு அரசுபுரிந்தமை, மூர்த்தி நாயனார், நின்றசீர் நெடுமாறன், மங்கையற்கரசியார், குலச்சிறையார் முதலியோருடன் வரலாற்றுத் தொடர்பு கொண்டமை, திருஞானசம்பந்தர் சமணர்களுடன் அனல்வாதம், புனல்வாதம் முதலியன செய்தமை, நக்கீரர் தமது பிழை உணர்ந்து இக்குளத்தில் மூழ்கி கோபப்பிரசாதம் பாடியமை முதலியவற்றை திரு ஆலவாய்த் திருத்தலத்தின் சிறப்புக்களாக இனங்கண்டு நுவலலாம்.

**திருவாலங்காடு**

திருவாலங்காடு, பதிகத்தொடரிலே இரண்டாவது தலமாக அமை கின்றது. காரைக்காலம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டிலும் சிவனின் பெருமைகள் திருவாலங்காட்டு திருத்தலத்துடன் இணைத்துப் பேசப்பட்டுள்ளன. காய்ந்த காட்டில் தாழ்வுற்ற சடையால் எண்திசைகளிலும் வீசி அங்கம் குளிருமாறு ஆடுதல், சினக் குறிப்போடு மணலை அள்ளிப் போட்டு அவித்து நின்றாடுதல், கள்ளியின் நிழலில் ஈமம் அடுக்கப்பட்ட இடுகாட்டிலே உடல் குளிர்ந்து அனலில் ஆடுதல், எல்லா உலகங்களிலும் பொருந்துமாறு ஆடுதல், ஊழிக்கால ஈமத்தில் ஆடுதல், சுடுகாட்டிலிட்ட பிணத்தினை வெளியே எடுத்து குறுக்கே பாய நின்று ஆடுதல், நெருப்பைக் கக்கி நரியும் ஆடும்படிச் செய்து ஆடுதல், பஞ்ச பூதங்களும்

சுழன்றிடுமாறு தீயைக் கையிலேந்தியாடும் சர்ப்பத்தையும் அணிந்து புயங்கக் கூத்தினை ஆடுதல், பல்வேறு வகையிலான வாத்தியக் கருவிகளை இயக்கி அதற்கேற்றாற் போல ஆடுதல், விண்ணவர்களின் மத்தளத்தின் ஓசை திசைகள் தோறும் சென்று ஒலிக்க, சிலம்புகள் ஆர்க்க ஆர்க்க யுக முடிவில் பெரிய ஆடல் கொள்ளுதல் என்றவாறு ஆடல் செய்யும் அப்பனாகிய சிவனின் இடம் திருவாலங்காடே என பல்வேறு சிறப்புக் குறிப்புகளுடன் திருவாலங்காட்டு மூத்த முதல் திருப்பதிகத்திலும், சிவனின் ஆடல் தோற்றப் பொலிவுகளுடன் இரண்டாம் திருப்பதிகத்திலும் இத்தலத்தின் சிறப்புரைக்கப்பட்டுள்ளது.

## திருக்கோயில் திருவெண்பா

ஐயடிகள் காடவர்கோன் நாயனாரால் அருளப்பட்ட ஷேத்திர வெண்பா பதிகத் தொடரில் ஐந்தாவதாக அமைந்துள்ளது. திருக்கோயில் திருவெண்பா எனவும் இதனைச் சுட்டுவர். வெண்பா யாப்பினால் பாடப்பெற்ற இப்பாடல்கள் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, உறவுகளின் செயற்பாடுகள், சாதற்காலத்துத் துன்பம் (முதுமைக்காலம்) என்பன பற்றிப் பேசுபவையாகவுள்ளன. இங்குள்ள இருபத்தினான்கு பாடல்களில் பத்தாம், இருபத்தி மூன்றாம் பாடல்கள் பொதுவானவையாகவும் ஏனைய இருபத்திரண்டு பாடல்களும் திருக்கோயில்களை மையப்படுத்திப் பாடப்பட்டனவாகவும் உள்ளன. உலக வாழ்வின் அவலநிலைமைகள் எடுத்துக் கூறப்பட்டு, அத்தகைய அவலங்களுக்கு ஆளாகுமுன் அவ்வத் தலங்களுக்குச் சென்று உபாசிதங்களில் ஈடுபடுமாறு ஆற்றுப்படுத்துகிறது ஷேத்திர வெண்பா. இப்பாடல்களில் சுற்றத்தாரான உறவுகளின் இயல்பான குணங்கள் கூறப்பட்டும், யாக்கை மற்றும் இளமை வாழ்வு ஆகியவற்றின் நிலையற்ற தன்மைகள் அறப்போதனையாக வெளிப்படுத்தப்பட்டும் சிவத்தலங்களை நோக்கியவாறு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

உள ஆற்றுப்படுத்தல் போதனையாக ஷேத்திர வெண்பாவை இனங்காண முடிகின்றது. இதனடிப்படையில் உடல் நோய்,

உளநோய்களுக்கு சிகிச்சையளிக்கும் நிறுவனங்களாக – நிலையங் களாக திருக்கோயில்கள் ஷேத்திர வெண்பாவும் அது சார்பான சிந்தனைகளைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். சான்றாக,

ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்பும் குறுகிற்று – நாடுகின்ற
நல்லச்சிற்றம்பலமே நண்ணாமுன் நன்நெஞ்சே
தில்லைச் சிற்றம்பலம் சேர்.

எனவரும் திருத்தில்லை மீதமைந்த பாடலையும்,

காளையர்கள் ஈளையர்கள் ஆகிக் கருமயிரும்
பூளையெனப் பொங்கிப் பொலிவிளந்து - சூளையர்கள்
ஓகாளஞ் செய்யாமுன் நெஞ்சே உஞ்சேனை
மாகாளம் கைதொழுது வாழ்த்து.

எனவரும் உஜ்ஜைனி மாகாளம் (உஞ்சேனை மாகாளம்) மீதமைந்த பாடலையும்,

இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லும் அயலார் துடிப்பளவே – நல்ல
திளைகுளத்து நீர் அளவே கிற்றியே நெஞ்சே
வளைகுளத்துள் ஈசனையே வாழ்த்து.

எனவரும் வளைகுளம் சோழநாட்டு வைப்புத்தலம் மீதமைந்த பாடலையும் சுட்டித்துக் கூறலாம். இவ்வாறே சிவபிரானடி சேர்க, நாமம் போற்றுக, போற்றிப் புகழுக, வாழ்த்துக, வழிபட்டுய்க, நினைத்துக் கைதொழுக என்று இறைவனை நோக்கிய ஆற்றுகைப் படுத்தலானது சிவத்தலங்களை முன்னிறுத்தி இடம்பெற்றுள்ளமை காணத்தக்கது.

**நிறைவுரை**

இதுவரை கூறியனவற்றால் அறியப்படுவனவற்றை கீழ்க்காணுமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம். இத்திருமுறை ஆசிரியர்கள் திருத்தலங்களை முன்னிறுத்தி பதிகங்களைப் பாடியிருப்பினும்,

அவற்றுள் இருபத்தைந்து பதிகங்களே பல்வேறு பிராந்தியங்களிலும் காணப்பட்ட சிவத்தலங்களை முதன்மைப்படுத்தியிருக்கின்றன. மூவர்முதலிகளின் பக்தியியக்கச் செயற்பாடுகளால் திருத்தலங்கள் சமூக மயமாக்கப் பெற்ற தன்மையின் இத்திருமுறை ஆசிரியர்களும் முயன்றுள்ளனர் எனலாம். இறைவனின் அன்பினை அவாவியும், உடலுள மேம்பாடு கருதியும், தமது குறையிரத்தலுக்கும், இறுதி நிலையாகிய திருவடிப்பேற்றினை வேண்டியும் வழிபடுமிடங்களாக திருத்தலங்கள் முன்னிறுத்தப்பட்டிக்கின்றன. எனவேதான் மனித வாழ்வின் அவலத்தன்மைகள் அத்தலங்களை முன்னிலைப்படுத்தி எடுத்தியம்பப்பட்டுள்ளன. இவ்வாறு எடுத்துரைப்புச் செய்வதனூடாக ஆன்மாக்களின் அகத்திலே சுயமான விழிப்பு நிலையினைத் தோற்றுவித்து, இறைவனின் இருப்பிடங்களை நோக்கி வழிகாட்டி உளவளத்துணை செய்யும் வகையில் சிவனது இறைமைத் தன்மை, அவ்விறைவன் வீற்றிருக்கும் ஸ்தலங்கள், இறைவனின் அருட்செயல் மற்றும் இலக்கணங்கள், ஆடற் கோலங்கள், இறைவனைக் குறித்த உபாசிதங்கள், அவ்வுபாசிதங்களால் இவ்வுலக மக்கள் அடைவதற்குரிய இம்மை, மறுமைப் பயன்கள் ஆகியன சிவத்தலங்களை மையமாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளதுடன், பக்தி இலக்கிய வகைமைக்குள் தனியிடம் பெற்ற தலபுராணங்களின் எழுச்சிக்கும் சிவத்தலம் பற்றிய பதிவுகள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன என்பதும் புலனாகின்றது.

### உசாத்துணை நூல்கள்


1. துரைசாமிப்பிள்ளை, து. ஔவை., 2011, சைவ இலக்கிய வரலாறு (கி.பி. 7 முதல் 10-ம் நூற்றாண்டு வரை), பூம்புகார் பதிப்பகம், சென்னை.
2. நடராசன், பி.ரா., (உ.ஆ.), 2005, பதினொராம் திருமுறை, மூலமும் - உரையும், உமா பதிப்பகம், பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை.
3. வெள்ளைவாரணன், க., 2008, பன்னிரு திருமுறை வரலாறு – 2, சாரதா பதிப்பகம், சென்னை.